1973 ஏப்ரல் 2]

திரு. கே. எ. வகாப் : வந்தவாசியில் உள்ள சாலேகளேப் போட நாங்கள் அதிகமானத் தொகை கேட்டிருந்தோம். ஆனுல் ஒரு அளவை வைத்து ஒவ்வொரு பேரூராட்சிக்கும் கொடுக்கிருர்கள். சில பேரூராட்சிகள் அதைப் போடுவதில்லே. ஆகவே சாலேகளேப் போடுகிற பேரூராட்சிகளுக்கு அதிகமாகக் கொடுக்கலாம். ஆகவே அந்த வகையில் சிலவற்றிற்கு மேலே கொடுக்கலாம் என்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசு கொடுக்கிற மானியத்திற்கு ஒரு வரையறை உண்டு. ரூ. 10,000 கொடுக்கலாம் என்பது அந்த வரையறை. மீதமுள்ளதை ஒன்றியம் அல்லது நகராட்சிமன்றம் தன் நிதியிலிருந்து செலவு செய்யவேண்டும். வந்தவாசிக்கு ரூ. 11,127 கொடுத்திருக்கிறேம். ஆக ரூ. 1,127 அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலேவர் ராட்டிபிக்கேஷன் செய்ய கேட்டிருக்கிருர்கள். அது அரசுக்கு வந்திருக்கிறது. வழங்கப்படவேண்டுமென்று விதித்த அளவைவிட இதற்கு அதிகமாக வழங்கப்பட்டிருக்கிறது.

உப்பனுற்றின் குறுக்கே பாலம்

* 600 வின—திரு. டி. வி. சம்பத் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி வட்டம், திருநகரிக்கும், வருசபத்து எடமணல் ரோட்டிற்கும் இடையில் உப்பனுற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனேயில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. கோ. இளங்கோவன் : கட்டப்பட இருக்கிறது என்று சொன்னூர்கள். எவ்வளவு காலத்தில் கட்டப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கட்டப்பட இருக்கிறது என்று நான் சொல்லவில்லே. செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனேயில் உள்ளதா என்பது கேள்வி. அரசாங்கத்தின் பரிசீலனேயில் இருந்து வருகிறது என்று குறிப்பிட்டேன். திருநகரிக்கும் வருசபத்து எடமணல் ரோட்டிற்கும் இடையில் உப்பனுற்றின் குறுக்கே பாலம் கட்டுவது 51 சாலேப் பணிகளின்

திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இரண்டு லட்சம் ரூபாய் செலவில் அரசு அங்கீகாரத்திற்கு அனுப்பியுள்ளார்கள். ரெயில்வே செம்மை நிதியில் இருந்து கொடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்கள். சாலைப் பணிகள் நிதியைப் பயன்படுத்திக் கொள்ள அரசின் அங்கீகாரம் பெறவேண்டுமென்று தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து இங்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது பற்றிய முடிவை அரசு விரைவில் எடுக்கும்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் மீனளத் திட்டங்கள்.

*** 601 வினா—திரு. கா. வேழவேந்தன்** : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள உள்நாட்டுப் பகுதி மீனளத் திட்டங்களின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பேரவைமுன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : ஏரிகள் நிறைந்த செங்கற்பட்டு மாவட்டத்தில் 37 ஏரிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என்று விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு மீனளத் துறை வளர்ச்சி அதிகாரியை நியமித்து முழுக்க முழுக்க அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள திட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ள அரசினால் ஒரு சிறப்புத் திட்டம் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சிறப்புத் திட்டமாகத்தான், நான்காண்டு காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டிய இத்திட்டத்தின் முடிவான மொத்தச் செலவு ரூ. 2,00,800 தொடர்செலவும், ரூ. 28,40,000 தொடராச் செலவுமாகும். 1973-74-ல் தொடர்செலவும் தொடரா இனச் செலவும் சேர்ந்து ரூ. 39,800 ஆகும். ஓடுநீர் மீன்வளர்ப்பு, சுற்றேட்ட நீரில் மீன்வளர்ப்பு, அன்னிய இன மீன்களை வளர்த்தல்; மலைப் பகுதிகளில் மீனள வளர்ச்சி, சாக்கடை நீரில் மீன் வளர்ப்பு, நெல்வயல்களில் மீன் வளர்ப்பு என்றெல்லாம் இருக்கின்றன. இவை நிச்சயமாகச் செயல்படுத்தப்படும்.

@ 281–287-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.